# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண் : 439 /TPT/2016

ஆணை எண் : 103/ 2017

நாள் :10/05/2017

திரு.M.தர்மராஜ்,
1 வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
பாலப்பள்ளம் பேரூராட்சி,
தாணிவிளை, உதய மார்த்தாண்டம்–629 178.

முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
பாலப்பள்ளம் பேரூராட்சி,
பாலப்பள்ளம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு.M.தர்மராஜ் அவர்களின் 14.03.2013 நாளிட்ட மனு நிர்ணயிக்கப்பட்ட படிவம் 1-ல் முறையீட்டு மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2016 அன்று பெறப்பட்டு 0439/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

1. மனுதாரர் முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம் பாலப்பள்ளம் பேரூராட்சியில் 2006 முதல் 2013 வரை நடைபெற்ற குளத்தின் வண்டல் மண்ணை செங்கல்சூளைக்கு விற்றது முதல் தார் சாலையில் மேற்கொண்ட ஒரே ஒரு பணியினை பல தடவைகள் செய்ததாக கூறி பல மோசடிகள் செய்தது போன்ற சில முறைகேடுகளை தெரிவித்து சட்டப்படியான நடவடிக்கை தொடர வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. மனுதாரரிடம் 30.01.2017அன்று விசாரணை மேற்கொண்டதில் கீழ்க்கண்ட விபரங்களைத் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளார்:-

 2010 ல் பாலப்பள்ளம் தார்சாலையில் பொதுநிதி, நபார்டு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட 3 பணிகள் திரு.நெல்சன் என்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது என்றும் இருப்பினும் மேற்படி சாலைப் பணிகளை ஒரே ஒரு தடவை செய்துவிட்டு மூன்று முறை செய்ததாக கூறப்பட்டு பண மோசடி நடைபெற்றது என்றும் பாலப்பள்ளம் குளத்தின் படித்துறை கட்டியது தூர்வாரியது, முள்வேலி அமைத்தது போன்ற சீரமைக்கும் பணிகளுக்கு ரூ 1 கோடிக்கு மேல் மோசடி நடைபெற்றது என்றும் சுனாமி திட்டத்தின் கீழ் ஒரே வேலையை இரண்டு இடத்தில் செய்ததாகவும் மீனவர் கிராமத்தில் நடந்த பணிகளில் ரூ.25 லட்சம் மோசடி நடைபெற்றுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. மனுதாரரின் குற்றச்சாட்டுக்கள் குறித்து பாலப்பள்ளம் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து விளக்க அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கையில் மனுதாரர் குறிப்பிட்ட பணிகள் அனைத்தும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, பேரூராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களால் அளவீடுகள் மேலளவுகள் செய்து மட்டுமே ஒப்பந்ததாரர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு பணிக்கும் நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி, வேலை உத்தரவு, ஒப்பந்த அங்கீகார தீர்மானம், அளவு புத்தகங்கள், மற்றும் பணம் பட்டுவாடா செய்யப்பட்ட விவரங்களை அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் திரு.M.தர்மராஜ் 25.10.2016 வரை பாலப்பள்ளம் பேரூராட்சி 1 வது வார்டு உறுப்பினராக இருந்துள்ளார். இவர் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012-13 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற முறைகேடுகள் குறித்து 14.03.2013 (இவ்வலுவலகத்தில் முறையீட்டு மனுவாகப் பெறப்பட்ட நாள்19.12.2016) நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார். பாலப்பள்ளம் பேரூராட்சியில் 2006 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து காலம் கடந்து தெரிவித்ததன் நோக்கம் தெரியவில்லை. மேலும் அன்னாரது புகார்களை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணத்தையும் முறையீட்டு மனுதாரர் வழங்கவில்லை.

5. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (c) படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்படும் முறையீடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு உட்படுத்துவது முறையாகாது மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதார- ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படாத நிலையிலும் மனுதாரரின் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய முடிவு எடுத்து அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 10ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்**

**பெறுநர்**

திரு.M.தர்மராஜ்,
1 வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
பாலப்பள்ளம் பேரூராட்சி,
தாணிவிளை, உதய மார்த்தாண்டம்,
629 178.

பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
பாலப்பள்ளம் பேரூராட்சி,
பாலப்பள்ளம் - 629 178.
கன்னியாகுமரி மாவட்டம்.